பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

16 07 2026 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. சென்னை பெரியார் நகரில் அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று திறந்து வைக்கிறார்.

3. தமிழகத்தில் சட்டக் கல்லூரிகளில் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு அதே ஆண்டில் பட்டங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. நாகர்கோவில் சிறையில் விசாரணைக் கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவத்திற்கு காரணமான குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. Budapest சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்துறையில் சுமார் 25 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதில் மொபைல் உற்பத்தி துறையில் மட்டும் 12 லட்சம் வேலைவாய்ப்புகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஓசூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் கர்நாடகாவின் பெங்களூருவில் உள்ள மொபைல் உற்பத்தி நிறுவனங்கள் மட்டும், ஒரு லட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

மின்னணுப் பொருட்கள் உற்பத்தியின் மதிப்பு கடந்த 11 ஆண்டுகளில் சுமார் 7 மடங்கு அதிகரித்துள்ளதாகவும், கடந்த நிதியாண்டில் 13 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

இக்காலகட்டத்தில் 4 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

மொபைல் ஃபோன் உற்பத்தியில் உலகின் இரண்டாவது மிகப்பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னை பெரியார் நகரில் அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று திறந்து வைக்கிறார்.

இது சென்னை மண்டலத்தின் 14வது அஞ்சல் நிலைய பாஸ்போர்ட் சேவை மையமாகும்.

இதன்மூலம் சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலக வரம்பிற்கு உட்பட்ட ஒவ்வொரு மக்களவைத் தொகுதியிலும் குறைந்தபட்சம் ஒரு பாஸ்போர்ட் சேவை மையம் அல்லது அஞ்சல் நிலைய பாஸ்போர்ட் சேவை மையம் செயல்படுத்தப்படும் என்ற இலக்கு நிறைவேற்றப்படுகிறது.

இச்சேவையால் வடசென்னை மக்களவைத் தொகுதியில் வசிக்கும் மக்கள் பாஸ்போர்ட் மற்றும் அது தொடர்பான சேவைகளை எளிதில் பெற முடியும்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டக் கல்லூரிகளில் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு அதே ஆண்டில் பட்டங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பட்டறைப்பெரும்புதூரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியின் 5ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு 257 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி அவர் பேசினார்.

சட்டப் படிப்பை நிறைவு செய்யும் மாணவர்கள் தங்களது துறைசார்ந்த அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாகர்கோவிலில் சிறைக் கைதி உயிரிழந்தது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

மின்வெட்டு ஏற்படும் பகுதிகளில் அதை சீர்செய்யும் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று திரு. நிர்மல் குமார் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாகர்கோவில் சிறையில் விசாரணைக் கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவத்திற்கு காரணமான குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், குற்றவாளிகளை தண்டிக்கும் உரிமை நீதித்துறைக்கு மட்டுமே உண்டு என்றும், இல்லையெனில் காவல்துறை மீது மக்கள் நம்பிக்கை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே இச்சம்பவத்தில் தொடர்புடைய அனைவரையும் முறையான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

உயிரிழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்பட வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**<<<<>>>>**

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோயில் சொத்து முறைகேடு வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சிபிசிஐடி விசாரணை மேற்கொண்டால் இவ்வழக்கில் உண்மையை வெளிக்கொணர முடியாது என்று கூறியுள்ளார்.

**<<<<>>>>**

நாகை மாவட்டம் வேளாங்கன்னி பேராலயத்தில் உத்திரைய மாதா ஆண்டுத் திருவிழா தேர்பவனி நேற்றிரவு விமரிசையாக நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ஈரான் மீது நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

-------------

பஹ்ரைன் மற்றும் ஜோர்டானில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் ராணுவம் கூறியுள்ளது.

-------------

இந்தியா - போலந்து இடையே சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த இருதரப்பு பேச்சுகள் புதுதில்லியில் நடைபெற்றது.

-------------

புதுதில்லியில் நடைபெற்று வரும் பாரத் டெக்ஸ் சர்வதேச ஜவுளிக் கண்காட்சியில் நேற்று உத்தரப்பிரதேசம், கர்நாடக மாநிலங்களில் உள்ள ஜவுளித்துறை வாய்ப்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

-------------

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் இருந்து அபுதாபிக்கு முதலாவது சர்வதேச விமான சேவையை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தொடங்கி வைத்தார்.

-------------

தமிழகத்தில் 13 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

-------------

திருநெல்வேலி மாவட்டம் கொடுமுடியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து நாங்குநேரி, ராதாபுரம் வட்டத்தில் பாசன வசதிக்காக இன்று முதல் 108 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

-------------

ஒரத்தநாடு, திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதி கட்டிடங்களை அமைச்சர் திருமதி கமலி திறந்து வைத்தார்.

-------------

தென்காசி, தருமபுரி, காஞ்சிபுரம் மாவட்டங்களில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் அரசு சேவைகள், நலத்திட்டங்கள் மக்களை சென்றடைவது குறித்து மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

--------------

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மற்றும் நாட்றாம்பள்ளி அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை இம்மாதம் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

-------------

சென்னை வடக்கு மண்டலத்திற்குட்பட்ட 608 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை மாநில அமைச்சர் திரு. வெங்கடரமணன் வழங்கினார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

Budapest சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஆடவர் 57 கிலோ எடைப் பிரிவு இறுதியாட்டத்தில் இந்திய வீரர் Aman Sehrawat 13-3 என்ற புள்ளிக் கணக்கில் ஜார்ஜியாவின் Roberti-ஐ வென்றார்.

வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் 61 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் தீபக் 9-8 என்ற புள்ளிக் கணக்கில் அஜர்பெய்ஜானின் நூர்தீனை வென்றார்.

65 கிலோ எடைப் பிரிவில் விஷால் 8-2 என்ற புள்ளிக் கணக்கில் கஜகஸ்தானின் Ossimzhan-ஐ வென்றார்.

-------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

Cardiff-ல் நடைபெற உள்ள இப்போட்டி மாலை மணி 5.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் முதல் ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்று முன்னிலை வகிக்கிறது.

--------------

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

சீனாவின் Haikou நகரில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

-------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் அர்ஜென்டினா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

Atlanta-வில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அந்த அணி 2-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

வரும் 19ஆம் தேதி நடைபெற உள்ள இறுதியாட்டத்தில் அர்ஜென்டினா அணி - ஸ்பெயின் அணியை எதிர்கொள்கிறது.

-------------

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் மகளிர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பி.வி. சிந்து, சீனாவின் Yue Han-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

<<<<>>>>